மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண்.01/2023

பெயர் – பேச்சிமுத்து (பி.வா.சா.3)

நாள் – 30.08.2024

6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சொத்து சம்மந்தமாக எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் மாரியம்மாள் சுகுமாரிக்கும், ராஜேந்திரனுக்கும் எழுதிக் கொடுத்த சொத்துக்கள் ஆகும். அந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியும். சர்வே எண் தெரியாது. முறையான ஆவணங்கள் தாக்கல் செய்த பிறகு தான் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

வாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை

நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் தீப்பெட்டி ஆபிசில் வேலை பார்க்கிறேன். ஓ.மேட்டுப்பட்டி, காளியம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வருவதற்கான ஆவணங்கள் எதையாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. 4ம் பிரதிவாதி முருகன் எனக்கு என்ன உறவு என்றால் எனது மனைவியும் முருகனின் மனைவியும் உடன்பிறந்தவர்கள் ஆகும். முருகன் அழைத்ததால் தான் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்ததை சாட்சியம் அளிக்கிறேன். முருகன் வாங்கிய சொத்து சம்மந்தமாக பிரச்சனை குறித்து என் முன்னிலையில் பேசினார்களா என்றால் நான் உடன் இருந்தேன். ஆனால் அவர்கள் என்ன பேசினார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் குருவம்மாளுக்கு பாத்தியப்பட்டது. குருவம்மாளுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. குருவம்மாள், மாரியம்மாளுக்கு தானமாக தாவா சொத்தை எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் தெரியாது. நான் ஓ.மேட்டுப்பட்டி கிராமத்தில் குடியிருந்து

வருவதற்காக யாதொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.